# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 389 /பேரூ/2025**
**நாள் : 11.05.2026**

M.S. சேஷாத்ரி,
ஆரணி,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி, 366, பஜார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.S. சேஷாத்ரி என்பவரது 10.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.10.2025 அன்று பெறப்பட்டு, 389/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி, 366, பஜார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 10.10.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

எங்கள் ஊர் ஆரணி பேரூராட்சியில் நாள் 05.12.2024 அன்று வார்டு கமிட்டி ஏரியா சபா கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் குறைகளை மனுக்களாக கூட்டத்தில் வழங்கப்பட்டது. அந்த மனுக்களின் மீது செயல் அலுவலர் அவர்கள் எந்த தீர்வும் காணப்படவில்லை என்று 21.01.2025 அன்று நினைவூட்டல் மனுவும் வழங்கினேன். அதற்கு பின்னும் அவர் எந்த பணிகளையும் மேற்கொள்ளவில்லை என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் குறை தீர்க்கும் நாள் 12.05.2025 அன்று அனைத்து மனுக்களையும் இணைத்து ஒரு புகார் மனுவும்

வழங்கினேன். அதற்கு பதிலாக செயல் அலுவலர் அடுத்து வரவிருக்கும் மன்ற கூட்டத்தில் கூட்டப் பொருளாக வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படும், பொதுமக்களின் கோரிக்கைகளை தீர்வு காணப்படும் என்று கடிதம் வாயிலாக தகவல் தெரிவித்துள்ளார். ஆனால் இன்று வரையில் எந்த தீர்வும் காணப்படவில்லை. அனைத்து மனுக்கள், வழங்கப்பட்ட கடிதங்கள், செய்தி தாளில் வந்த புகைப்படம் அனைத்தும் நகல் எடுத்து இந்த விண்ணப்பத்துடன் இணைத்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தனது 10.10.2025 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ள திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு முகவரியிட்ட 12.05.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்.

"ஆரணி பேரூராட்சியில் 3வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் தமிழக அரசின் ஆணைக்கிணங்க வார்டு கமிட்டி ஏரியா சபா கூட்டம் நடைபெற்றது. அதில் 3வது வார்டு பொது மக்கள் கலந்துகொண்டு அவர்களின் குறைகளை மனுக்கள் முலமாக அலுவலக பணியாளர் மற்றும் மன்ற உறுப்பினர் அவர்களிடம் வழங்கினோம். அந்த மனுக்களின் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று 21.01.2025 அன்று முதல் நினைவூட்டல் கடிதம் அளித்தேன். அந்த கடிதத்திற்கும் நடவடிக்கை எடுக்கவே இல்லை. மீண்டும் 15.04.2025 அன்று இரண்டாவது நினைவூட்டல் கடிதம் அளித்தேன். அதன் பின்னரும் நான் வழங்கப்பட்ட குறைகளைவு மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதாக தெரியவில்லை. எனவே நாங்கள் வார்டு கமிட்டி ஏரியா சபா கூட்டத்தில் அளித்த அனைத்து மனுக்களின் நகல்கள் மற்றும் செயல் அலுவலர் அவர்களுக்கு அளித்த நினைவூட்டல் கடிதங்களின் நகல்கள் தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். நாங்கள் வழங்கிய குறைகளைவு மனுக்களின் விவரங்கள் பின்வருமாறு:

1. ஆரணி பேரூராட்சியில் சர்வே எண். 252/2ல் குளம் வகைப்பாட்டில் தடை மனுக்களை மீறி கழிவறைகளும், கழிவுநீர் தொட்டிகளையும் கட்டப்பட்டதை அகற்ற கோருதல் தொடர்பாக.
2. அம்ரூத் 2.0 திட்ட பணிகளில் பழுதாக்கப்பட்ட சாலைகளை சீரமைத்துத் தர கோருதல் தொடர்பாக.
3. 3வது வார்டு பகுதியில் மோசமான நிலையில் உள்ள சிமெண்ட் சாலைகளை சீரமைக்க கோருதல் தொடர்பாக.
4. பஜார் தெருவில் அமைக்கப்பட்ட மழைநீர் கால்வாயில் பொதுமக்கள் வீடுகளில் உள்ள கழிவுநீர் விடுவதை தடுக்க கோருதல் தொடர்பாக.
5. ஆரணி பகுதியில் உள்ள அத்திகுளம் ஆற்றில் மக்கள் அனைவரும் அவர்களின் கழிவுநீர் குளத்தில் விடுவதை தடுக்க கோருதல் தொடர்பாக.
6. ஆரணி மகளிர் மேல்நிலை பள்ளிக்கு பின்புறம் உள்ள மின்கம்பங்களுக்கு, தெரு மின்விளக்கு பொருத்த மின்சார ஒயர் அமைக்க கோருதல் தொடர்பாக.
7. ஆரணி ராமகிருஷ்ணாநகர் பகுதியில் சாலைகளை அமைத்து தர கோருதல் தொடர்பாக.
8. பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வீடு கட்ட நிதி பெற்று தர வேண்டுமாய் தொடர்பாக.
9. பொதுமக்களுக்கு விநியோகிக்கும் தண்ணீரில் கழிவுகள் கலந்து வருவது தடுக்க கோருதல் தொடர்பாக.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 21.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 08.04.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 20.03.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரரான திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சியில் 3வது வார்டு தொடர்பாக 10.12.2024 அன்று வார்டு கமிட்டி, ஏரியா சபா கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 3வது வார்டில் உள்ள பொதுமக்கள் கலந்துகொண்டு தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளை தங்களது மனுக்களில் மூலம் தெரிவித்துள்ளனர்.
- மேற்காணும் மனுக்கள் மீதான எந்தவித நடவடிக்கையும் பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை என்று முதல் நினைவூட்டல் 21.01.2025 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டாவது நினைவூட்டல் மனு 12.04.2025 அன்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றாவது முறையாக மாவட்ட ஆட்சியரின் குறை தீர் நாளன்று 12.05.2025 அன்றும் புகார் மனுக்கள் வழங்கப்பட்டுள்ளது. இருந்தும் இதுவரையில் பொதுமக்களின் குறை களைவு மனுக்களின் மீது எந்தவிதமான தீர்வும் காணப்படவில்லை என்று இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.
- குறைகளைவு மனுக்களின் விவரம்:

  (1) ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட 3வது வார்டில் உள்ள பாலாஜி நகர் பின்புறம் மற்றும் ராமகிருஷ்ணா நகர் பகுதிகளில் தெரு மின்விளக்குகள் அமைத்திட மின்சார கம்பிகள் அமைத்து தர கோருதல்.

  (2) ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட 3வது வார்டில் உள்ள பாலாஜி நகர் மற்றும் ராமகிருஷ்ணா நகர் பகுதிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெறுவதற்கான குடிநீர் பைப்புகள் அனைத்தையும் தேக்கி வைத்து கனரக வாகனங்களின் மூலமாக கொண்டு சென்றதில் அப்பகுதி சாலைகள் முழுவதும் படு மோசமான நிலையில் குண்டும் குழியுமாக சேதமடைந்துவிட்டதால், உடனடியாக புதிய சாலைகள் அமைத்து தர கோருதல்.

  (3) ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட பஜார் தெரு முதல் அத்திக்குளம் வரையில் அமைக்கப்பட்ட மழைநீர் கால்வாயில் பொதுமக்கள் வீடுகளில் மற்றும் கழிவறைகளில் உள்ள கழிவுநீரை மழைநீர் கால்வாயில் இணைத்து நீர்நிலையான அத்திக்குளத்தில் விடுவதை நிரந்தரமாக தடுக்கக் கோருதல்.

மேற்காணும் ஏரியா சபா கூட்டத்தில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பல முறை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால், உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5 எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட 3வது வார்டில் அமைந்துள்ள பாலாஜி நகர் மற்றும் ராமகிருஷ்ணா நகருக்கு தெரு மின்விளக்குகள் அமைத்திட மின்சார கம்பிகளுக்கான கேட்புத் தொகை 3 பகுதிகளுக்கு தலா ரூ.23,500/- வீதம் ஆகமொத்தம் ரூ.70,500/- மின்சார வாரியத்திற்கு கேட்பு செலுத்தப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

- ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் பைப்லைன்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்று முடிவுற்றன. குடிநீர் குழாய் பதிக்கப்பட்ட சாலைகளில் ஏற்பட்டுள்ள சாலை பழுதுகளை மேற்காணும் திட்டத்தின் கீழ் தெரியப்படுத்தப்பட்ட வகையில் பேட்ச் ஒர்க் மூலம் சாலைகளில் பழுதுகளை சீரமைக்கப்பட்டு, தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

- ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட 8 குளங்களில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் வகையில் இப்பேரூராட்சியானது ஆய்வு மேற்கொண்டு கழிவுநீரானது மழைநீர் கால்வாய்களில் கலப்பது கண்டறியப்படின் அவ்வீட்டின் உரிமையாளருக்கு முதல் தடவையாக ரூ.500 அபராதமாகவும், இரண்டாம் முறை மீண்டும் கழிவுநீரை விடப்பட்டால் ரூ.1,000ஆகவும் தொடர்ந்து மூன்றாவது முறையும் கழிவுநீர் விடப்பட்டால் சம்பந்தப்பட்ட சொத்துவரி செலுத்தும் உரிமையாளரின் குடிநீர் இணைப்பு துண்டிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பேரூராட்சி மன்றத்தில் தீர்மானமாக கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது என இம்முறை மன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு 02.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 73/2026/அ1ல் தனது விளக்கத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"05.12.2024ஆம் தேதியன்று வார்டு சபா மற்றும் ஏரியா சபா கூட்டம் நடைபெற்றதில், மக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் 2022-2023ஆம் ஆண்டிற்கு ரூ.4.35 இலட்ச மதிப்பீட்டில் உயர் கோபுர மின் விளக்கு வார்டு எண். 3 பஜார் தெருவில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் அமைத்துத் தரப்பட்டது. ஆரணி பேரூராட்சியில் தற்போது பணியாற்றி வரும் செயல் அலுவலரால் கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டம் 2022-2023ஆம் ஆண்டின் கீழ் இவ்வார்டு பகுதிகளான பஜார் 10வது மற்றும் 14வது தெரு, சாமூண்டீஸ்வரி நகர் 1வது , 2வது, 3வது தெருக்கள் மற்றும் இதர தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.85.00 இலட்ச மதிப்பீட்டில் இப்பகுதியில் சாலை அமைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 2023-2024ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.2.80 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.3 தெலுங்கு காலனி கழிப்பிடம் புனரமைப்பு செய்தல் பணி முடிக்கப்பட்டது. 15வது நிதிக்குழு 2024-2025 அன்டைய்டு மான்ய நிதியில் ரூ.18.30 இலட்ச மதிப்பீட்டில் வார்டு எண்.3 பஜார் தெரு 1, 2 மற்றும் 3 தெருக்கள் பேவர் பிளாக் சாலை அமைத்தல்

பணி செய்து முடிக்கப்பட்டது. அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 2023-2024ஆம் ஆண்டுக்கு ஆரணி பேரூராட்சி அனைத்து பகுதிகளிலும் ரூ.7.98 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் நடைபெற்றதில் வார்டு எண்.3 பகுதிகளில் அமைந்துள்ள இராமகிருஷ்ணா நகர் மற்றும் பாலாஜி நகரில் ஆழ்துளை குழாய் கிணறுடன் கூடிய மின் மோட்டார் அமைத்தல் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் குடிநீர் வினியோகம் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, 2025-2026ஆம் ஆண்டிற்கு பொது நிதியின் கீழ் ரூ.18.30 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 3 பஜார் தெருவில் 4,5,6,7,8 மற்றும் 9 தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆரணி பேரூராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணியின் போது சாலைகளில் ஏற்பட்ட பழுதுகளை அம்ரூத் 2.0 திட்ட ஒப்பந்ததாரரால் சிமெண்ட் கான்கிரீட் மூலம் பழுதுகள் சரி செய்யப்பட்டது. மேலும், தற்போது 2025ஆம் ஆண்டு அக்டோபர் 27ஆம் தேதியன்று நடைபெற்ற பகுதி சபா கூட்டத்தில் பொருள் எண். 1,2,3 மற்றும் பொருள் எண். 4 கொண்டு வரப்பட்டு அதனை ஆலோசித்தும், பரிசீலித்தும் பேரூராட்சி மன்றமானது பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை தீர்மானத்தில் கொண்டு வரப்பட்டு, பொருள் எண்.13, பொருள் எண்.14 மற்றும் பொருள் எண்.17க்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3வது வார்டு பகுதியில் பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் PMAY 2.0 என்ற இணையதளத்தில் தற்போது வீடுகள் திட்ட அறிக்கை பிரேரணை தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் மனுதாரர் கோரியுள்ள நபர்களுக்கு வீடுகள் வழங்க முன்மொழிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படடு வருகிறது என்ற விவரம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

3வது வார்டு பகுதியில் சுகாதாரமான குடிநீர் வினியோகம் தங்கு தடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் குடிநீர் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டம் முடிவுற்று தற்போது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது என்ற விவரம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. M.S. சேஷாத்ரி என்பவர் தனது 10.10.2025 நாளிட்ட புகார் மனுவில் பேரூராட்சியில் 3வது வார்டு தொடர்பாக 10.12.2024 அன்று வார்டு கமிட்டி ஏரியா சபை கூட்டத்தில் அளிக்கப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என கீழ்க்காணும் புகார்களை தெரிவித்திருப்பது அவரது மனுக்கள் மற்றும் வாக்குமூலங்களில் இருந்து அறிய முடிகிறது.

(i) ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 252/2 குளம் வகைப்பாட்டிலுள்ள இடத்தில் கட்டப்பட்ட கழிவறைகளும் மற்றும் கழிவுநீர் தொட்டிகளையும் அகற்றக் கோருதல்.

(ii) பேரூராட்சியின் 3வது வார்டிலுள்ள பாலாஜி நகர் பின்புறம் மற்றும் ரரமகிருஷ்ணாநகர் பகுதிகளில் தெருமின்விளக்குகள் அமைக்கக் கோருதல்.

(iii) மேற்காணும் பாலாஜி நகர் மற்றும் ராமகிருஷ்ணாநகர் பகுதிகளில் 2.0 அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் பைப்புகள் அமைக்கும்போது ஏற்பட்ட பழுதான சாலைகளை சீர் செய்யக் கோருதல்.

(iv) பஜார் தெரு முதல் அத்திக்குளம் வரையில் அமைக்கப்பட்ட மழைநீர் கால்வாயில் பொதுமக்கள் கழிவுநீரை விடுவதை தடுக்கக் கோருதல்.

(v) பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வீடு கட்ட நிதி பெற்று தர வேண்டுதல்.

மேற்காணும் மனுதாரரின் புகார் மனு குறித்து, எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாகவும் மற்றும் ஆவணங்களின் மூலமும் கீழ்க்கண்டவாறு தெரிய வருகிறது.

(i) ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 252/2ல் ஆக்கிரமித்து கட்டியுள்ள கழிவறைகளையும் கழிவுநீர் தொட்டிகளையும் அகற்ற வேண்டி, இதே மனுதாரரான திரு. M.S. சேஷாத்ரி என்பவர் ஏற்கனவே 11.10.2025 நாளிட்ட புகார் மனு சமர்ப்பித்திருந்தார். அதனை இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொண்டு, ஆணை எண். 385/பேரூ./2025 நாள் 08.04.2026ல் ஆணை தனியே வெளியிடப்பட்டுள்ளது.

(ii) பேரூராட்சியின் 3வது வார்டிலுள்ள பாலாஜி நகர் மற்றும் ராமகிருஷ்ணா நகருக்கு தெருமின்விளக்குகள் அமைத்திட 3 பகுதிகளுக்கு தலா ரூ.23,500 வீதம் மொத்தம் ரூ.70,500 தொகை மின்சார வாரியத்தில் செலுத்தப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

(iii) அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொண்டபோது ஏற்பட்ட சாலை பழுதுகளை பேட்ச் ஒர்க் மூலம் சாலைகளில் உள்ள பழுதுகளை சீரமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிலுள்ளது.

(iv) பேரூராட்சிக்குட்பட்ட 8 குளங்களில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் வகையில், கழிவு நீரானது மழைநீர் கால்வாய்களில் கலப்பதை கண்டறியப்படின், அவ்வீட்டின் உரிமையாளருக்கு முதல் தடவை ரூ.500, 2வது தடைவ ரூ.1,000 என அபராதமும், 3வது தடவை கழிவுநீரை விடப்பட்டால் அவ்வீட்டின் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்காக பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

(v) பாரத பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் திட்ட அறிக்கை பிரேரணை தயார் செய்யப்பட்டு வரும் நிலையில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு வீடுகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்காணும் நிலையில், ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட பாலாஜி நகர் மற்றும் ராமகிருஷ்ணாநகர் பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் அமைத்திட காலதாமதமின்றி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், பேரூராட்சிக்குட்பட்ட சாலைகளில் எவ்வித பழுதுகள் இல்லாமல் சீரமைக்கப்பட்டு இருப்பதை உறுதி செய்திடவும், பேரூராட்சிக்குட்பட்ட குளங்களில் கழிவுநீர் கலக்காத வண்ணம் பொதுமக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்திடவும் மற்றும் பாரத பிரதமரின் வீடுகட்டும் திட்டத்தின் கீழ்

வீடுகள் வழங்குவதற்கான மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் நடவடிக்கையினை எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காத வகையில் விரைவாக மேற்கொள்ளுமாறு ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்றம் நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு மே திங்கள் 11 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்
திரு. M.S. சேஷாத்ரி,
எண். 366, பஜார் தெரு,
பொன்னேரி வட்டம், ஆரணி,
திருவள்ளூர் மாவட்டம் 601 101.

2. செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/5/26
செயலாளர்
20/5/26.